IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.
PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா. ௯ { Prosecution PW.௯
{ Defence
{ Court

1. Name : திரு.தெட்சிணாமூர்த்தி

2. Father Name : கொலுந்தான்

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடகண்டம், கரைவீரன் காலனிதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக

எனக்கு எதுவும் தெரியாது. தற்போது காட்டப்படும் பார்வை மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தினை வடகண்டத்திற்கு ஒருநாள் போலீசார் வந்து சண்டை சம்பவம் நடந்ததற்காக கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். யார் யாருக்கு சண்டை, என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. போலீசார் சண்டை நடந்ததாக சொல்லி கையெழுத்து போடும்படி கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். அதிலுள்ள விவரமும் எனக்கு தெரியாது. பார்வை மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரப்பட்டதன் அடிப்படையில், வழக்கின் சூழலை கருத்தில் கொண்டு அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும் அப்போது கடந்த 29.11.2016 ஆம் தேதி பகல் 1 மணியளவில், சம்பவ இடத்தை குடவாசல் காவல் நிலைய ஆய்வாளர் என் முன்னிலையிலும், தங்கராசு என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் தயார் செய்ததாகவும், அப்போது நாங்கள் உடனிருந்து பார்வை மகசரில் விவரம் அறிந்து சாட்சி கையெழுத்து போட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மைகளை மறைத்து தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:54:34 +0530